26.03.2025 S.C.No.138 of 2017 P.W.16 – Srinivasan

(A3 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1, A2, A4 and A6 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.30 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: நான் என்ன படித்துள்ளனே் என்றால் ?

ப: 12ம் வகுப்பு படித்துள்ளேன்.

கே: எத்தனை ஆண்டுகள் நான் போலீஸ் துறையில் பணிபுரிந்துள்ளேன் என்றால் ?

ப: 24 ஆண்டுகள்.

கே: Police Standing Order குறித்து தங்களுக்கு தெரியுமா என்றால் ?

ப: தெரியும்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 இரவு பாரா பணியில் இருந்தீர்களா என்றால் ?

ப: இருந்தேன்.

கே: பாரா பணி பார்ப்பவர்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் இருக்கிறதா என்றால் ?

ப: இருக்கிறது.

கே: 15.06.2015 அன்று பாரா பணியில் இருந்தீர்களா என்றால்?

ப: அன்றைய தேதியில் நான் பணியில் இல்லை.

கே: அ.த.சா.ஆ.25 ல் தங்களது கையொப்பம் உள்ளது, அதற்கு முன்பாக கைதிகளின் எண்ணிக்கை என்ற Column–ன் கீழ் 16.06.2015,

17.06.2015 ஆகிய தேதிகளில் எவரேனும் இருந்ததாக இதில் (பட்டியல் ஆவண எண் 36, பக்க எண் 65) உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: ஒரு நிலையத்தில் குறிப்பாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் பொதுநாட்குறிப்பில் எழுதவேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: உங்களுடைய நோட்புக்-ல் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் பாரா டியூட்டியில் இருந்து குறித்து அன்றைய தேதிகளில் யார்யார் நிலையத்தில் இருந்தார்கள் என்பது குறித்து குறிப்புகள் ஏதும் எழுதியுள்ளீர்களா ?

ப: என்னுடைய அலுவல்களை எழுதியிருக்கிறேன். யார் யார் இருந்தார்கள் என்று எழுதவில்லை.

கே: உங்களுடைய அனுபவத்தில் விசாரணைக்காக யாரையாவது நிலையத்திற்கு அழைத்து வந்தால் அது குறித்து பொநாட்குறிப்பில் எழுதவேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் ஜிடி பொறுப்பு எஸ்எஸ்ஐ ரவிதான் என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் தாங்கள் ஜிடி பொறுப்பில் இருந்தீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: உங்களுடைய அனுபவத்தில் காவல் நிலையத்தில் குறிப்பாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் உள்ள வாகனத்திற்கு ஒரு டைரி லாக்புக் இருக்கும் என்பது குறித்து தங்களுக்கு தெரியுமா

என்றால் ?

ப: தெரியாது.

கே: அரசு அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்ட வாகனங்களுக்கு ஒரு டைரி/ லாக்புக் இருக்க வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: சென்ட்ரி புக்–ல் ஒவ்வொரு நாளும் இரவில் யார்யார் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து பெயர் குறிப்பிட்டு எழுதவேண்டும் என்றால் ?

ப: ஜிடி பொறுப்பில் இருப்பவர்கள் சொன்னால்தான் எழுத முடியும். அவ்வாறு சொல்லாத நிலையில் நாங்களே தன்னிச்சையாக எழுத முடியாது.

கே: மேற்சொன்னவாறு சென்ட்ரி புக்–ல் குறிப்பிட்டு எழுதுவதற்கு எவருடைய அனுமதியும் தேவையில்லை. குறிப்பாக பாரா டியூட்டியில் இருப்பவர்கள் சென்ட்ரி புக்கில் நிலையத்தில் தங்க வைத்திருப்பவர்கள் குறித்து எழுத வேண்டும் என்பது தங்களது அனுபவத்தில் தெரிந்திருந்தும் தற்போது நீதிமன்றத்தில் ஜிடி பொறுப்பில் இருப்பவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று தவறான ஒரு சாட்சியத்தை அளிக்கிறீர்கள் என்றால்?

ப: குற்றவாளி இருந்தால் மட்டுமே எழுத முடியும். விசாரணைக்கு வருபவர்களை குறித்து ஜிடி பொறுப்பில் இருப்பவர் சொன்னால் மட்டுமே எழுத வேண்டும்.

கே: ஒரு வாகனத்தை கைப்பற்றி நிலையத்திற்கு எடுத்து வருகிறபோது அவ்வாகனத்தை குறித்து நிலையத்தில் உள்ள பொதுநாட்குறிப்பில் எழுத வேண்டும் என்றால் ?

ப: தெரியாது.

கே: 17.06.2015 அன்று பறிமுதல் செய்து கொண்டுவரப்பட்ட பொலிரோ வாகனம் குறித்து ஏதேனும் பதிவுகள் பொதுநாட்குறிப்பேட்டில்

உள்ளதா என்றால்?

ப: அது குறித்து பதிவுகள் ஏதும் இல்லை.

கே: பொலீரோ வாகனத்தை பறிமுதல் செய்த இடத்திற்கு தாங்கள் சென்றீர்களா என்றால் ?

ப: நானும், நந்தக்குமார், YB ராஜேஷ் மூவரும் சென்றோம்.

கே: மேற்சொன்னவாறு மூன்று பேரும் சென்றது குறித்து உங்களது நோட்புக்கில் பதிவு செய்தீர்களா ?

ப: பதிவிடவில்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் கொண்டுவரப்பட்ட பொலீரோ வாகனத்தை குறித்து சென்ட்ரி புக்கிலோ அல்லது பொதுநாட்குறிப்பிலோ அல்லது அதற்கான தனிப்பட்ட முறையில் பராமரிக்கப்படும் பதிவேட்டிலோ பதிவு செய்யப்படவில்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: பொதுவாக தங்களின் அனுபவத்தில் ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் நிலையத்தில் யார்யார் இருக்கிறார்கள் என்ன நிகழ்கிறது என்பது குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுப்பார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: தாங்கள் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் மாலை பாரா பணியில் இருந்திருக்கிறீர்கள். அந்த காலக்கட்டத்தில் மேற்கண்ட தேதிகளில் நிலையத்தில் யார்யார் இருந்தார்கள் என்னென்ன நிகழ்ந்தது என்பது குறித்து தாங்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தீர்களா ?

ப: நான் எதுவும் கொடுக்கவில்லை.

கே: அப்படியானால் ஜிடி பொறுப்பில் இருப்பவர்கள் கொடுத்தாக வேண்டும் என்றால் ?

ப: ஜிடி பொறுப்பில் இருப்பவர்கள் தான் பேச வேண்டும்.

கே: நீங்களோ அல்லது ஜிடி பொறுப்பில் இருந்தவர்களோ உயர் அதிகாரிகளுக்கு யார் யார் நிலையத்தில் இருந்தார்கள் என்னென்ன நிகழ்பு நடந்தன என்பது குறித்து தகவல் சொல்லும்போது ஏதேனும் ஒரு ஆவணத்தில் பதிவு செய்யும் வழக்கம் இருக்கிறதா என்றால்?

ப: ரப் டியூட்டி ரிஜிஸ்டரில் பதிவு செய்துள்ளோம்.

கே: ரப் டியூட்டி ரிஜிஸ்டரில் மேற்சொன்னவாறு ஏதேனும் தகவல்கள் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: 1ம் எதிரியை தவிற வழக்கின் பிற எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் வழக்கின் எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு எப்போது வந்தார்கள் என்னென்ன பணி செய்தார்கள் என்பது குறித்து மேற்கண்ட தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பொதுநாட்குறிப்பில் தகவல்கள் இல்லை என்றால் ?

ப: அது பற்றி எனக்கு தெரியாது. நான் சென்ட்ரி புக்–ல் கடைசி Column ல் உள்ளதற்கு மட்டுமே பொறுப்பு.

கே: சென்ட்ரி புக்–ல் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் செய்யப்பட்டுள்ள வழக்கின் எதிரிகள் நிலையம் வந்ததாகவோ பணிகள் செய்ததாகவோ அதற்காக அவர்கள் கையெழுத்து போட்டதாகவோ பதிவு ஏதும் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 தேதிகளில் ஜிடி பொறுப்பில் இருப்பவர்கள் வேறு பணிக்கு செல்லுகிற போது ஜிடி பொறுப்பு யாரிடம் இருக்கும் என்றால் ?

ப: பாரா பணி பார்ப்பவரிடம் இருக்கும்.

கே: பொதுநாட்குறிப்பு பதிவேட்டில் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் ஜிடி பொறுப்பில் இருந்தவர் வேறு பணிக்கு சென்றபோது நிலையத்தில் யார்யார் இருந்தார்கள் என்பது குறித்து ஏதேனும் பதிவுகள் உள்ளனவா ?

ப: இல்லை.

கே: உங்களை சிபிசிஐடி விசாரித்தார்களா ?

ப: விசாரித்தார்கள்.

கே: விசாரித்து எழுதிக்கொண்டார்களா ?

ப: சொல்ல சொல்ல தட்டச்சு செய்துக்கொண்டார்கள்.

கே: கையெழுத்து போட்டிர்களா ?

ப: கையெழுத்து போட்டேன்.

கே: படித்து பார்த்தீர்களா ?

ப: படித்து பார்த்தேன்.

கே: உங்களுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் "19.06.2015 காலை 09.00 மணிக்கு ஷமீல் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார்" என்று எங்காவது குறிப்பிடப்பட்டுள்ளதா ?

ப: இல்லை.

கே: தங்களது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் "16.06.2015 ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ்வுடன் ஷமீல் என்ற ஒரு நபர் உட்கார்ந்திருந்தார்" என்று உள்ளதா ?

ப: மார்டின் பிரேம்ராஜ்வுடன் இருந்ததாக இல்லை. அவரது அறைக்கு வெளியில் ஒருவர் தரையில் உட்கார்ந்திருந்தார் என்று உள்ளது. முதல் விசாரணையில் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

கே: சிபிசிஐடி சொல்லிக்கொடுத்தது போல் முதல் விசாரணையில் உங்களது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் இல்லாததை கூறியிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரிதான்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

என்னுடைய பணி காவல் நிலையத்தின் அன்றாட பணி மற்றும் பாரா பணியாகும். ஜிடியை பற்றி கொஞ்சம் தெரியும் முழுமையாக தெரியாது. General duty–ல் பந்தோபஸ்து, இரவு பணி, சென்ட்ரி ஆகியவை இருக்கும். General duty என்பது அனைத்து அலுவலக பணிகளும் வந்துவிடும். General duty–ல் இருப்பவர்களுக்கு பணி வழங்குபவர்கள் எழுத்தர். அப்போது எழுத்தர் முத்துக்குமரன் ஆவார்.

பாரா பணி பார்ப்பவர்கள் ஒரு தனியான நோட்புக் வைத்திருப்பார்கள். பொதுமக்கள் யாராவது வந்தால் அது தொடர்பாக தகவல் மேல் அதிகாரிகளுக்கு அல்லது உயர் அதிகாரிகளுக்கு கொடுப்போம். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணியாளர்களை மட்டும்தான் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ரப் டியூட்டி ரோஸ்டரில் இருக்கும் என்றால் சரிதான்.

பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 16.06.2015 முதல் 19.06.2015 வரை பணிபுரிந்தவர்கள் எஸ்எஸ்ஐ சிங்காரம் 3605, எஸ்எஸ்ஐ ரவி 1643, ராஜேந்திரன் எஸ்எஸ்ஐ 4050, திரு.கலைச்செல்வன் எஸ்எஸ்ஐ 1404, HC 257 அனுமந்தன், HC 686 சிவாநந்தம், HC 2394 முத்துக்குமரன், HC 345 பரத், WHC HC 2302,

கங்காபாய் 2302, Grade I PC சீனிவாசன், PC 526 ரஜேஷ்குமார், PC 2938 தமிழழகன், YB 8523 சதீஷ்குமார், YB 8504 தீபக்குமார், YB 8602 ராஜேஷ்குமார், YB 8802 மணிகண்டன் ஆகியோர் மட்டும் உங்களுடன் பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான்.

மேற்சொன்ன நபர்கள் தொடர்பான அவர்கள் செய்த அலுவல்கள் இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் இவற்றை மட்டும் பாரா பணியில் இருப்பதால் நான் தெரிந்துக்கொள்ள முடியும் என்றால் சரிதான். ரப் டியூட்டி ரிஜிஸ்டரை பொறுத்தவரையில் வழக்கின் எதிரிகளுக்கும் இந்த பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான்.

பிரிகேடர் பணியில் இருசக்கர வாகனங்கள்தான் பயன்படுத்தப்படும். நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் வாகன எண்ணை சிபிசிஐடி விசாரணையில் தெரிவித்திருக்க வேண்டும், சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் பயன்படுத்தும் வாகனத்திற்கு பெட்ரோல் மற்றும் பராமரிப்பு செலவுகளை பற்றி உயர் அதிகாரிகளுக்கோ அல்லது பதிவேட்டிலோ குறித்திருக்க வேண்டும் என்றால் பிரிகேடர் வாகனத்தை நான் பயன்படுத்தவில்லை.

வாகனங்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பாக விஷயங்களை Armed reserve–க்கு MT office–க்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். 16.06.2015 மற்றும் 17.06.2015 ஆகிய நாட்களில் காவல் நிலைய ஜிடி தொடர்பான பொறுப்பு ஏதும் இல்லை.

என்னுடைய நோட்புக்கில் எதிரி ஐய்யப்பன் மற்றும் எதிரி சுரேஷ் ஆகியோர் அருணாச்சலத்தை காவல் நிலையத்தில் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் அழைத்துச்சென்றார்கள் என்ற விஷயத்தை

என்னுடைய பாரா நோட்புக்கில் குறிப்பிட்டு எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். என்னுடைய பாரா பணியில் முதல் விசாரணையில் நான் சொன்ன விஷயங்கள் இருந்திருக்க வேண்டும் அப்படி இல்லாமல் நீதிமன்றத்தில் நீங்கள் எந்த வெறும் தகவல்களாக சொன்ன அந்த விஷயங்கள் என்னுடைய உயர் அதிகாரியாகிய சிபிசிஐடியினுடைய நெருக்கடிக்கு பயந்து தாங்கள் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சிபிசிஐடி விசாரிக்கும்போது என்னுடைய பாரா என்ட்ரி தொடர்பான பதிவுகள் எதையாவது நான் ஆதாரமாக கொடுத்தேனா என்றால் என்னுடைய நோட்புக்கில் நான் அவ்வாறு எழுதவில்லை. வழக்கு தொடர்பாக இருந்தால் மட்டுமே நான் எழுதுவேன். அதை நான் சிபிசிஐடியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

ஐயப்பன் மற்றும் சுரேஷ் என்பவர் ஜவ்வாதுமலையில் செம்மரக்கட்டை தொடர்பாக பணிபுரிந்ததால் அவர் அங்கு வந்திருக்க வாய்ப்பில்லை என்றும் சிபிசிஐடி சொல்லிக்கொடுத்து நான் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.15 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.26 17:49:31 +0530